JAN 25 [illegible]

V12 NO 11 NOV 93

JL
[illegible]1993A
M30.12.11
2[illegible]82

M 1530.
"BALAVINODHINI"
CHILDREN'S FRIEND
பாலவிநோதினி
குழந்தைகளின் அன்பன்.
ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி
Vol. XII NOV. 30. № 11
PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet. MADRAS.

N. B:—The Subscribers are requested to p
our agents only on obtaining our *Bonafide* receipts.

All Rights Reserved by the Publishe

பாலவிநோதினி

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
	481
தெய்வ வணக்கம்	482—485
ஹிதோபதேசம்	486—492
உழைப்பின் பெருமை ...	492
அரிய பழமொழிகள்	493—494
கொசு	495—497
அவசரக்கோ... அள்ளித்தெளி ...	495—497
பொருளை...வினால் வந்த தீங்கு ...	498—500
சில ...ரிய பழமொழிகள்	500
...லீபா உமர் இப்னு அப்துல் அஜீஸின் பயபக்தி	501—502
நன்மாணாக்கர்	502
பெண்கள் குண ஆராய்ச்சி ...	503—505
வெள்ளைப் பூண்டின் குணம் ...	505
வெங்காயம்	506—508
ஹாஸ்யம்	509
தாழ்வான செய்கைகளை விட்டு விடவேண்டும்	510—511
156-வது வயதில் பிரயாணம் ...	511
முத்துதாண்டவர் கீர்த்தனம் ...	512
சப்பாத்துக்கள்ளி அல்லது நாகதாளியின் சில உபயோகங்கள்	513—519
காட்டும் உமது தந்திரத்தை! ...	520—522
பண்டைய அரசரின் தெய்வ பக்தி	523—526
காலமறிந்து பயிர் செய்ய வேண்டும்	527—528

சுபத்தைத் தரும் வெகுமானங்கள்

ஒச்சமில்லாத இரத்தினங்களை அமைத்துச் செதுக்கிய நகைகளைத் தரிப்பவர்களுக்கு அவ்விரத்தினங்கள் வெகு சுப பயன்களைக் கொடுக்கும் என்று பழைய காலத்திலிருந்து நமது பெரியோர் நம்பி வருகிறார்கள். அவ்விதமான ஆபரணங்களையே நமது நாட்டாருக்குக் கொடுக்க வேண்டுமென்னும் விருப்ப மொன்றே ஆதிகாலத்திலிருந்து எங்கள் கருத்து. ஆகையால 36 வருஷத்திற்கு முன் நாங்கள் இந்த வியாபாரம் துடங்கியது முதல் ஒச்சமில்லாதவையும் உயர்ந்த நீரோட்ட முள்ளவையுமான இரத்தினங்களை பதித்த நகைகள் விற்று வருகிறோம். எங்கள் நகைகள் இம்மாதிரியானவை என்று நாங்கள் உத்திரவாதமாயிருப்பதுதான் எங்களிடம் நகை வாங்குபவர்களுக்கு முழு ஜாமீனாகும்.

வைர வியாபாரத்தில் நாங்கள் இவ்வளவு பெருமையடைந்ததற்குக் காரணம் என்ன வென்றால், நமது நாட்டாருடன் நம்பிக்கையாயும் குற்றமின்றியும் வியாபாரம் செய்து வருவதேயாம்.

ஆகையால் எங்களிட மிருக்கும் கைதேர்ந்த வேலைக்காரரின் உதவியை நீங்கள் பெற்றுக் கொண்டு, அதனா லுண்டாகும் நற்பயன்களை நீங்கள் அனுபவிப்பதே உங்களுக்கு லாபகரமான வேலை.

சுராஜ்மல் லல்லுபாய் அண்ட் கோ,
நகை வியாபாரிகளும், உயர்ந்த வெள்ளி
சாமான்கள் செய்பவர்களும்,
313, எஸ்பிளனேட், மதருஸ்

மணித் தைலம்

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்யப்பட்ட கூந்தல் தைலம். மண்டையை குளிர்ந்திருக்கச் செய்து, தலைமயிரை உதிராமற் தடுத்து பளபளப்பாயும் நீளமாயும் வளரச் செய்யும்.

5-துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ 1.

இனும் இனும

போஜன விதிகள்.

ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய புஸ்தகம். விலாஸத்தை தெரிவியுங்கள். இனுமாக தபால் செலவின்றி அனுப்புகிறோம்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

வால்மீகி ராமாயண வசனம்.

வால்மீக ராமாயணத்தை ஸம்ஸ்கிருதத்திலிருந்து சரியாகத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத ஸ்லோகங்கள் சங்க்யையை இன்ன சுலோகங்களின் மொழிபெயர்ப்பென்று அறிய பாராக்கள் இலக்கம் கண்டிருக்கிறது.

பாலகாண்டம்	...	1	0	0
அயோத்தியா காண்டம்	...	2	4	0
யுத்த காண்டம்	...	3	0	0

மற்ற காண்டங்கள் அச்சிலிருக்கிறது. சீக்கிரத்தில் வெளிவரும்.

V. RAMASWAMY SASTRULU & SONS,
392, Esplanade, Madras

FEDERATED INDIA

(An All-India English Weekly)

PUBLISHED EVERY WEDNESDAY

Annual Subscription Rs. 5.

PLEASE APPLY TO:—
THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

THE LAW OF ELECTION

BY

K. L. NARASIMHA RAO,

Advocate, High Court, Madras.

Contains all the Acts, Rules, Regulations, and Forms, brought up-to-date regarding Elections to every Statutory Body from the Village Panchayat to the Council of State. Indispensable to every public worker and practitioner.

Price Rs. 3-8-0. *(Postage Extra.)*

"SRI RAMA PRESS" *3, Sivaramulu Chetty St., Tondiarpet, MADRAS.*

ஞானம் வைத்தியவித்தியா

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக்கூடியதுமான இப்புத்தகம். தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய

நாராயணஜீ கேசவஜீ,

நெ. 1/94, சைஞ பஜார் ரோட். சௌகார்பேட், மதராஸ்.

Moral class reading books for the young

BY

Varakavi Tiru: A SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,

323, Tiruvottiyur High Road, MADRAS.

MADAN MANJARI PILLS

பூலோக அமிர்த மென்று புகழப்படுகின்ற இம்மாத்திரை அஜீரணம், மலசிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி நபும்சகத்துவம், இவை போன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0

மதன மஞ்சரி ஆபீஸ், 1/94, சைஞ பஜார் ரோட், மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி



காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாடில் 1-க்கு அணு 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா 1 12 0

விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ் வகைரு பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,

நெ. 44, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

தந்தி விலாசம் "நஸ்யம்"

மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான நோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசக்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

20 தோலா டப்பி 1-க்கு ரூபா	1	4	0
வி.பி. சார்ஜு	0	6	0

பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

ஸ்ரீ மகாபாரத வசனம்.

பாரதப் பிரசங்கி யென்று பெயர் பெற்றவரும் வித்வசிரோமணி யெனச் சிறப்புற்றவருமாகிய ஆ. சண்முகக் கவிராயரவர்கள் இயற்றியது. பாலவிநோதினிப் பத்திரிகாசிரியர், வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி யவர்களால் பரிசோதிக்கப் பெற்றது. நல்ல உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பெற்றது. இதுவரையில் இதுபோன்ற பதிப்பு வெளிவந்ததே கிடையாது. கலாசாலைக்கும் லைப்ரேரிக்கும் உபயோகப்படக்கூடிய சிறப்புடையதாய்க் கெட்டி கலிகோபயிண்டு செய்தது.

சண்முகக் கவிராயரவர்களுடைய வசனநடை நல்ல பாஷா ஞானத்தையும், சிறந்த வாக்கையும் கொடுக்கக்கூடிய தென்பதும் பாமரருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தென்பதும் தமிழ் மக்களின் பெரும்பான்மையோர் நன்குணர்வர்.

பாரதம் இதிகாஸ ரத்தினமென்றும் ஐந்தாவது வேதமென்று புகழத்தக்க பெருமை யுடையதென்றும் அதிலில்லாத நீதிகளே கிடையா வென்றும் ஆஸ்திக புத்தியைக் கொடுத்து ஒழுக்கத்தில் நிலை நிறுத்தக்கூடிய போதனைகளை அளிக்கக்கூடியதென்றும் பெரியோர்கள் கொண்டாடப்படுவ தாகையினால் தமிழ் நாட்டில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் மக்கள்கையில் பூஷணமாக விளங்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

		ரூ.	அ.	பை.
1.	ஆதிபர்வம்	3	0	0
2.	சபாபர்வம், ஆரண்யபர்வம், விராடபர்வம் இவை மூன்றும் சேர்ந்து ஒரேபயிண்டு விலை ரூபா ...	5	0	0
3.	உத்தியோகபர்வம்			
4.	பீஷ்மபர்வம், துரோணபர்வம், கர்ணபர்வம், சல்லியபர்வம், சவுத்திகபர்வம், ஸ்ரீபர்வம், சாந்திபர்வம், அநுசாசனிகபர்வம, அசுவமேதபர்வம் ஆசிரமவாசபர்வம், முசலபர்வம், மகாப்ரஸ்தானிகபர்வம், சொர்க்காரோகணபர்வம் இவை பதின்மூன்றும் ஒன்று சேர்ந்தது. ஒரே பயிண்டு. இது அச்சிலிருக்கிறது. விலை.	5	0	0

இவ் வால்யூம்களை சேர்ந்தாற்போல் ஒரே காலத்தில் வாங்குகிறவர்களுக்கு விலை ரூபா 12-8-0.

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்

தமிழ் பாலபோத இலக்கணம்.

இந்த இலக்கணம், சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் சிறந்த இலக்கண வித்துவானாக விளங்கிய விசாகப் பெருமாளையரவர்கள் இயற்றியது. சூத்திரங்களெல்லாம் இனிய வசன நடையில் பாலர்கள் எளிதில் தாமே படித்து உணரக்கூடிய முறையில் விரிவாயும் பல உதாரணங்களுடனும் விளக்கப் பட்டிருப்பது இதற்குள்ள சிறப்பாகும். பால விநோதினிப் பத்திரிகாசிரியர். வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதியவர்களால் பழைய பிரதிக்கிணங்க நன்கு பரிசோதிக்கப் பெற்றது. பள்ளிக்கூட மாணவர்களுக்கும் தனியே தமிழ்ப் பாஷையில் தேர்ச்சிபெற விரும்பிப் படிப்பவர்களுக்கும் இந்த நூல் சாலப் பயன் படக்கூடியதாகையினால் இதனை உயர்ந்த காகிதத்தில் வெகு நேர்த்தியாய் அச்சிட்டிருக்கிறோம். கலாசாலைத் தலைவர் இதனைத் தங்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகமாகவேனும் பள்ளிக்கூட லைப்ரேரிக்கேனும் உபயோகப் படும்படி சிபார்சு செய்வார்களானால் அது பேருபகாரமாகும்.

விலை ரூ. 1—0—0

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்.

தமிழ் நூல்கள்

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் பிழையில்லாமல் அச்சிடப்பட்டவை.

	ரூ.	அ.	பை.
திருக்குறள் விளக்க நூல்கள் (குறிப்புரையுடன).			
திருக்குறள் (பரிமேலழகர் உரை பாகெட் சைஸ்)	2	0	0
திருக்குறள் மூலம் (காலிகோ பைண்டு) பாகெட் சைஸ்	0	6	0
வெண்பாக்கள்.			
சிவசிவவெண்பா (குறிப்புரையுடன்) ...	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா ...	0	2	6
இரங்கேச வெண்பா	0	2	0
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6
திரட்டு நூல்கள்.			
திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	0
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு ...	0	3	0
தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத் திரட்டு	0	10	0
இலக்கணமும், நிகண்டும்.			
நன்னூல் மூலம்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0
பால்போத இலக்கணம் (விசாகப் பெருமாளையர்)	1	0	0
வசன நூல்கள்.			
ஆன்றோர் சரித்திரம் (எம். வி. ஈஸ்வரய்யர்) ...	0	5	0
கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்டவாசகம்	0	5	0

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதறாஸ்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 12	1930 ௵ நவம்பர் மாதம்	பகுதி 11

தெய்வ வணக்கம்

மூவராந்தேவர் முதலான பரதெய்வம் நீ
முத்தொழினடாத்துமிறை நீ
மும்மலக்கட்டறுத்தன்பர் மனமின்பமுற
முத்திதரு கர்த்தன் நீயே
யாவராலும் மகிமை யளவிடற்கரியதாம்
அகிலபுவனங் கடந்த
அற்புதச் சிற்சொரூபானந்த மூர்த்தியே
அம்பிகைக் கின்பமகனே
தாவிவான் படரவோர் பற்றின்றி வாடிடும்
தளிரிளங் கொடிபோலவே
சஞ்சலத்தா லென்ன செய்வதென் றுணராத
சமயமீ தருளண்ணலே
பாவனாதீதனே பரமகுருநாதனே
பன்னிருகரக் குமரனே
பழமறைக டருசீல மழவிடையா ரருள்பால்
பழனிமலை முருகேசனே.

(பாரதி.)

ஹிதோபதேசம்

(1) ‘ஸத்தியத்திற்கு ஸமானமான தருமமில்லை. பொய்க்கு ஸமானமான பாபமில்லை. வேதத்தைவிட மேலான சாஸ்திரமில்லை. அன்னைக்கு நிகரான குருவில்லை’—என்று ஐந்தாவது வேதமென்று போற்றப்படுவதாகிய பாரதம் கூறுகிறது.

(2) வேதமே சகல தருமங்களுக்கும் ஆதாரம். அது புராதனமான நூல். அது உலகத்தின் நன்மையின் பொருட்டு ஏற்பட்டது. வேதங்களைத் தழுவியே ரிஷிகள் புராணங்களை இயற்றியருளினார். வியாஸ மகரிஷி வேதத்தை—ருக்—யஜுஸ்—ஸாம—அதர்வண—என நான்கு வகையாகப் பிரித்து அவற்றின் அபிப்பிராயங்கள் விரவி வரும்படி மகாபாரதத்தை இயற்றியருளினார். வியாஸர் இயற்றியருளிய மகாபாரதம் ஜீவகோடிகளின் நன்மைக்காக ஏற்பட்டது.

(3) பாரதம் ஜயத்தையும் புண்யத்தையும் சிறந்த புத்தியையும் நல்ல தைரியத்தையும் கொடுக்கத் தக்கது. ஆகையினால் அதனைத் தினந்தோறும் பாராயணம்போற் படித்து வருவதில் சிறுவர் ஊக்கஞ் செலுத்த வேண்டும்.

(4) உலகத்தில் விசேஷமான காரியத்தில் பெயரெடுப்பவன் எவனோ அவனே கர்மசூரன் என்படுவான். அப்படியல்லாதவனை ஆமைக்கு நிகராகக் கூறும்

உலகம். ஆமை மனிதர்களைக் காணாதபோது கை கால்களை நீட்டிக்கொண்டிருந்து கண்டபோது கை கால்களைச் சுருக்கிக் கொள்ளுகிறதல்லவா? அதுபோல் வாய்வீரம் பேசுவோர் எதிரிகளைக் காணாதபோது அட்டகாசப் பேச்சுப் பேசி எதிரிகளைக் கண்டபோது மௌனம் சாதிப்பர்.

(5) நெருப்பிலே காய்ந்து பொங்கி வழியும் பாலானது கொஞ்சந் தண்ணீரைத் தெளித்தமாத்திரத்தில் எப்படி அடங்குகிறதோ அப்படியே பெரியோர்கள் கொண்ட கோபமு மடங்கும்; அப்பால் நன்மையையும் பயக்கும். பெரியோர்கள் கோபத்தினும் நன்மையுண்டாகுமென்றால் அவர்களிடம் யார்தான் பணிவில்லாமலிருக்க விரும்புவர்?

(6) பெருமை, வண்மை, ஆண்மை இவை யாவும் பொறுமையினாலேயே ஒருவனிடம் ஓங்கி வளர்கின்றன. இதனாலேதான் அறிஞர் பொறுமையைப் பூஷணமாகக் கொண்டு உலகத்துக்கு இதஞ்செய்கின்றனர்.

(7) “ஓ ஜனங்களே! பொறுமையை அடையுங்கள்; அகங்காரத்தை விடுங்கள்; பாபத்தில் அன்பு பாராட்டாதேயுங்கள்; ஸத்தியத்தைச் சொல்லுங்கள்; நல்லவழியில் நடவுங்கள்; வித்வான்களைச் சேவியுங்கள்; பூஜ்யர்களைப் பூஜை பண்ணுங்கள்; பகைவரையும் அநுசரியுங்கள்; குரு முதலானவர்களை நன்றாக வணங்குங்கள்; கீர்த்தியைக் காப்பாற்றுங்கள்; துக்கமடைந்தவரிடம் தயை காட்டுங்கள்’ — இவைகளெல்லாம் சாதுக்களுடைய செய்கைகள்”—என்று நீதி சதகம் போதிக்கின்றது.

(8) இந்தச் சரீரம் அதியுன்னதமான மலையின் கொடுமுடியிலிருந்து மேடுபள்ள முள்ளதாயும் கடின மான கற்களுள்ளதாயுமுள்ள இடத்தில் விழுந்தாலும் நல்ல சுபாவத்தை மாத்திரம் விடுவது கூடாது. நல்ல சுபாவத்தை மேற்கொண்ட விபீஷணன், துருவன், மார்க்கண்டேயன், ப்ரஹ்லாதன், ஸாவித்திரி, தமயந்தி, சீதை, சந்திரமதி—அரிச்சந்திரன், நளன், பாண்டவர் இவர்கள் மேன்மையடைந்ததைக் கவனியுங்கள்.

(9) மேற்கொண்ட அல்லது தொடங்கிய காரி யத்தை முடிக்கக் கருத்துடையவீரன், சிலசமயங்களில் தரையில் படுத்துக் கொள்வான்; சில சமயம் கீரையை ஆகாரம் பண்ணுவான், சில சமயம் சம்பாவரிசி அன்ன மும் உண்பான்; சில சமயம் கந்தைத் துணியை உடுத்துக் கொள்வான். சில சமயம் திவ்ய வஸ்திரந் தரித்துக் கொள்வான்; அவன் தனக்கு நேரிடும் துக் கத்தையும் சுகத்தையும் பொருட்படுத்தமாட்டான். ஸ்ரீராமகாரியத்தை மேற்கொண்ட மாருதியின் தன் மையைக் கவனியுங்கள்.

இதனாலேதான் பெரியார்—

"மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற் கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"—

என்று கூறியிருக்கிறார்.

(10) மக்கள் தமக்கருகேயுள்ள உப்பு நீர் நிலையை அடையாமல் தூரத்தேயுள்ள நன்னீர் நிலை

மிகச் சிறியதாக விருந்தாலும் அதனை யடைந்து அதி னின்றும் நீரெடுத் துண்பதுபோல, வறியவர் தமக் கருகேயுள்ள லோபிகளை யடையாது தூரத்தேயுள்ள ஈகையாளரை யடைந்து அவரிடத்திருந்தே பொருள் பெற்றனுபவிப்பர். ஈகையாளர் கடற்கரை நன்னீரூற் றுப்போன்றவ ராவர். உலோபிகள் உப்பு நீர் நிலைபோன் றவராவர்.

(11) மனத்தில் நல்லெண்ண முடையவன் சுக மாக நித்திரை செய்கிறான்; 'மனம்போல வாழ்வு'— என்றபடி அவனுடைய வாழ்க்கையும் சிறப்படைகிறது, மனத்தில் நல்ல எண்ண மில்லாதவன் இரவில் நித் திரை பிடியாமல் வருந்துகிறான். அவன் வாழ்க்கை இழி வான நிலையை அடைகிறது.

(12) கடலின் நடுவே கப்பல் புயற்காற்றி லகப் பட்டுக்கொண்டபோது அதில் பிரயாணஞ் செய்பவர் கள் கடவுளை யெண்ணுகிறார்கள். மற்ற வேளையில் தாங் கள் பரதந்திர ரென்பதையும் தங்களுடைய வாழ்வும் சரீரமும் நீர்மேற் குமிழி போன்றவை யென்பதையும் மறந்து திரிகிறார்கள். இதனாலேதான் இப்படிப்பட்ட மனிதர்களை உலகம் அக்ஞானியென்று கூறுகின்றது. ஞானிகள் எப்போதும் கடவுளிடம் அன்புடையவரா கவே இருப்பார்கள். "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்கிற உறுதி அவர்கட்கு என்றும் மனத்தில் மங்காத தீபம்போற் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

இதனாலேதான்—ரஸ்கின் என்ற மேனாட்டு மேதா வியும்—"நாம் ஈசுவரனுடைய துணையைப்பற்றினால் அடையக்கூடாதது ஒன்றுமில்லை"—என்றார்.

உழைப்பின் பெருமை

பிள்ளைகளே ! உழைப்பின் பெருமையே பெருமை ! உழைப்பில்லையாயின் மனிதன் எந்த ஒரு சிறு நலத்தையும் அடைய முடியாது. இப்போது நாம் காணும் புகைவண்டியும் ஆகாய விமானமும் மற்றும் பல அதிசயமான விநோதக் கட்டிடங்களும் யாவும் உழைப்பின் பயனால் ஏற்பட்டனவேயாம்.

இவையன்றி உழைப்புடையவனே தேக திடமும் நோயின்மையு முடையனாயிருப்பதைக் காண்கிறோம். உழைப்புடையவன் வாழ்வே சிறந்திருப்பதையுங் காண்கிறோம். உழைப்பில்லாத சோம்பேறி நோய்க்கிருப்பிடமாயும் வறுமைக்குப் பிறப்பிடமாயும் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆகையினால் உழைப்பே சகல நன்மைகளுக்கும் ஆதார மென்றறியலானோம். இதுபற்றி ஒரு கதை யுண்டு. அதைக் கவனிப்போம்—

கோவிந்தபுரம் என்கிற ஊரில் இரண்டு பணக்காரரிருந்தனர். அவர்களில் ஒருவன்பெயர் சாம்பமூர்த்தி, மற்றவன் பெயர் சுந்தரமூர்த்தி - இவர்களிருவரும் இரும்பு வியாபாரம் செய்தனர். சாம்பமூர்த்திக்கு இரண்டு மூன்று வருஷத்தில் நஷ்டமேற்பட்டபடியால் அவன் ஏழையாய் விட்டான்.

ஏழையான சாம்பமூர்த்தி எப்போதும் உழைப்பதற்குப் பின்வாங்குகிறவனல்லன்; உழைப்பின்பயனை

நன்குணர்ந்தவன். அப்படியிருந்தும் அவன் நஷ்டமடைந்த தேனென்றால் — வியாபார தந்திரங்களிற் போதிய அறிவில்லாமலிருந்ததேயாம். வியாபாரத்திற்கு மூலதனமாத்திர மிருந்தாற் போதாது. தக்க சாமர்த்தியமும் தந்திரமும் வேண்டும். அன்றியும் வியாபார அநுபவ முடையவருடைய துணையும் வேண்டும். இன்றேல் தானே ஒரு வியாபாரியிடமிருந்து பழக்கப்பட்டிருக்க வேண்டும்.

இது நிற்க - கஷ்ட கால வசத்தினால் ஏழையான சாம்பமூர்த்தி சிறிதும் வருத்தப்படாமல் இனி உழைப்பினாலேயே வருவாயைத் தேடிக்கொள்வதென்கிற உறுதிகொண்டு தினமும் கஞ்சியும் நீராகாரமும் நிரம்பக் குடித்துத் திருப்தியுட னிருந்தான். அவன் மனைவியும் மக்களும் அவனுடைய நிலைமையை அநுசரித்து— அவனுக்கு எந்த விதத்திலும் சிரமந்தராமல் அமரிக்கையாயிருந்து வந்தார்கள்.

தனக்கு இப்படி மனைவியும் மக்களும் வாய்த்ததை யெண்ணி "கடவுள் இந்தக் கஷ்ட காலத்தில் இவர்களால் ஒருவிதத் தொந்திரவுமில்லாமற் காப்பாற்றுகிறாரே! இதுவே எல்லா பாக்கியமு மாகும்" என மகிழ்வான்.

நாடோறும் காலையிலெழுந்ததும் மனைவியை அன்பாயழைத்து, "எனக்குப் பாலும் பழமும் சர்க்கரையும் கொண்டுவா, வெளியே போகவேண்டும்" என்பான். மனைவி, ஒரு ஈயச்செம்பு நிறைய சாதீர்த்தமும் மிளகாய்ப் பழமிரண்டும் பூவரசிலையில் கொஞ்

சம் உப்பும் கொண்டுவந்து வைப்பாள். சாம்பமூர்த்தி, சாதீர்த்தத்தில் உப்பைப்போட்டுக் கலக்கி, மிளகாய்ப் பழத்தைத் தொட்டுக்கொண்டு குடித்துவிட்டு, வேலைக்குப் போவான்; அப்பால் நடுப்பகலில் சமைத்த சோறு உண்பான்; இரவில் சாதாரணமான உணவெடுத்துக் கொள்வான்.

சாம்பமூர்த்தி நல்ல உழைப்பாளியாயும் சாதாரணமான ஆகாரம் உண்பவனாயு மிருந்தபடியால், நோய்வாய்ப்பட்டு வருந்தாமல் நல்ல தேக திடனுடையவனா யிருந்தான். அவன் மக்களும் மனைவியும் நோயற்றவர்களாயும் நல்ல தேகதிட னுடையவர்களாயு மிருந்தார்கள். சாம்பமூர்த்தி பரம ஏழையாயிருந்தாலும் அவனுடைய வாழ்க்கை இன்ப வாழ்க்கையாகவே யிருந்தது.

சுந்தரமூர்த்திக்குப் பொருள் மேலும் மேலும் சேர்ந்தது. பொருள் சேரவே அவன் பெரிய சோம்பேறியானான். தனக்கு வேண்டிய எந்த ஒரு சௌகரியத்திற்கும் வேலையாட்களை எதிர் பார்த்தவனாய் விட்டபடியால் வேண்டிய வேலைக்காரர்களை நியமித்துக் கொண்டான். வீட்டுத் திண்ணையை விட்டு இறங்குவதே யில்லை. நாடோறும் மூன்று வேளைக்கு ஆறுவேளையாய் வாய்க்கு வேண்டியவைகளை யெல்லாம் சமைக்கச் செய்து உண்பதும் உறங்குவதுமா யிருந்தான். அதனால் சுந்தரமூர்த்தியின் தேகம் மாமிச பர்வதம்போல் பருத்துப் பலவிதமான நோய்களுக்கு ஓர் ஆலயம்போலாயிற்று. அவனுடைய மக்களும் மனைவியும் அப்படிப்பட்ட நிலையினையே அடைந்தார்கள்.

காற்றோட்டமான இடத்தில் நடமாட்டமும் உழைப்பும் மிதமான ஆகாரமும் இருந்தாலல்லவா தேகம் சௌக்கிய நிலையை யடைந்து பலமடைந்து உற்சாகமும் ஊக்கமும் பிறப்பதற் கிடமாயிருக்கும்? அவையொன்றுமில்லாத சுந்தரமூர்த்தி நோய்களுக்குத் தப்புவதெப்படி? என்ன செய்யலாம்! பொருள் பெருத்துவிட்டால் மூளை சிறுத்து, டம்பம் அகங்காரம் சோம்பேறித்தனம், மந்தபுத்தி யாவும் கூடவே வளருகின்றன வன்றோ?

இவ்வாறு தேகநிலை கெட்டதை யறிந்த சுந்தரமூர்த்தி, ஒரு நாள் "பக்கத்துவீட்டுக்கார சாம்பமூர்த்தி, பரம ஏழை. அவனுக்கு நமக்கிருக்கும் சௌகரியத்தில் நூறிலொருபங்குகூட வில்லை. அப்படியிருந்தும் அவன் நோய்நொடி யில்லாமல் சுகமாய் உலாவுகிறான்! உழைக்கிறான்! அவன் உடல் இளைக்காமலிருக்கிறது. அவன் சுறுசுறுப்பாகவுமிருக்கிறான்; ஊக்கமும் உற்சாகமு முடையவனாயிருக்கிறான். இதற்கென்ன காரணம்?"—என்று தன் மனைவி மக்களுடனிருந்து ஆலோசித்தான்.

அவர்கள் "அவன் தினந்தோறும் பாலும், பழமும், சர்க்கரையும் புசிக்கிறான்! அதனாலேதான் அப்படியிருக்கிறான். நீங்கள் வேண்டுமானால் நாளையதினம் கவனியுங்கள். அவன் அவன் மனைவியை அழைத்துப் பாலும் பழமும் சர்க்கரையும் கொண்டுவரும்படி கட்டளை யிடுவது கேட்கும்" என்றார்கள்.

அவன் மறுநாள் கவனித்தான். சாம்பமூர்த்தி வழக்கம்போல் தன் மனைவியை, பாலும் பழமும் சர்க்

கரையும் கொண்டுவரும்படி சொல்வது சுந்தரமூர்த்தியின் செவியில் நன்றாய்க் கேட்டது. அவன் அதைக் கேட்டதும்—"ஓ சுண்ணாம்பி லிருக்கிறது சூட்சுமம்—என்பார்கள். இதனை நாமறியாமற் போனோம்"—என்றெண்ணி மறுநாள் முதல் பாலும் பழமும் சர்க்கரையும் நினைத்தபோதெல்லாம் சாப்பிட்டு வந்தான்.

அப்பால் அவனுக்கு அஜீரணமுண்டாய் அவஸ்தைப்படலானான். என்ன செய்வான் அவன்! உடனே சாம்பமூர்த்தியை அழைத்து அவனிடம் ஆலோசித்தான். அவன் தான் தினந்தோறும் உண்ணும் ஆகாரத்தைக்கூறி– "நண்ப, அதிகப்படியான ஆகாரமெல்லாம் தேகத்திற்குத் தீங்கையே தருமல்லது நன்மை தராது சாதாரணமான ஆகாரந்தான் தேகத்திற்குச் சுகந் தரும். பலர் இந்த நுட்பந் தெரியாமல் அவஸ்தைப்படுவதுடன் முடிவில் உடலை நோய்க்கு இரையாக்குகிறார்கள். நல்ல காற்றும்* நல்ல உணவும் மக்களுடைய சுகத்திற்கு இன்றியமையாதனவாகும். ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது— கூறுகிறேன்— கேள்—

அக்பர் சக்கரவர்த்தி அரசு புரிந்தகாலத்தில் அவருடைய சபைக்கு ஒரு பெரியவர் வந்தார். அக்பர் அவருக்குச் சகல உபசாரங்களையுஞ் செய்து, "உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

பெரியவர்—"எனக்கு என்ன தேவையோ அதற்கு அதிகமாகவே கடவுள் எனக்கு எல்லாம் உதவி யிருக்கிறார்."

அக்பர் — "பரவாயில்லை — இன்னும் விருப்பமானதைக் கேளும்— தருகிறேன்"—

பெரியவர் — "வேந்தே! நீர் இனி எப்போதும் என்னை உம்முடைய அரண்மனைக்கு வரவழைப்பது கூடாது. இதுவே - நான் விரும்புவது — ஏனென்றால் என்னுடைய காலத்தை நான் கடவுளைத் தியானிப்பதிற் செலவழிக்க விரும்புகிறேன்.

அக்பர் — "அப்படியா — நல்லது! எனக்கு ஒரு வரமளிக்க வேண்டும்.

பெரியவர் — "சொல்லட்டும்."

அக்பர் — "ஸ்வாமி, எனக்கு நல்ல புத்திமதிகள் சில கூறி யருளவேண்டும்" — என்றான்.

அப்பால் பெரியவர் கொஞ்ச நேரம் ஆலோசனையிலிருந்து, "வேந்தே — உம்முடைய ஆகாரமும் நீர் அருந்தும் ஜலமும் சுத்தமாயிருக்கின்றனவா என்பதைக் கவனிக்கவேண்டும். இரவில் தவறாமல் கவனிக்க வேண்டும்" என்றார்.

"See that your food be pure and clean, and look with care at your meat or drink and especially at night"

அக்பர்— "ஸ்வாமி தம்முடைய இந்தப் புத்திமதியின்படி நான் தவறாமல் நடப்பேன்" — என்றார்.

பிள்ளைகளே! கவனியுங்கள் — இது ஒரு நல்ல புத்திமதி யல்லவா? — பரிசுத்தமான உணவும் ஜலமும் உடம்பைப் பரிசுத்தப்படுத்தும். பரிசுத்த உடம்பானது, பரிசுத்தமான ஜீவனுக்கு ஓர் ஆலயம் போன்றதாகும். ஆகையினால் என்றும் சாதாரணமான

உணவுகளையும் பரிசுத்தமான உணவுகளையும் உட்கொள்ளுங்கள். அதிக உணவையும் ஆடம்பரமான உணவையும் அசுத்த உணவையும் விலக்குங்கள்! உழைத்து நல்ல உணவை அடையுங்கள். "உழைத்து நல்லுண கொள்" என்ற பெரியார் கட்டளையை மறவாதேயுங்கள். "போனக மென்பது தானுழந் துண்டல்" என்ற போதனையை அடிக்கடி சிந்தியுங்கள்.

"Many diseases follow the eating of impure food" என்று சொல்வதுண்டு.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிற் சிலர் தெருவில் புழுதிபட வைத்திருக்கும் பலகாரங்களையும் மணிலாக் கொட்டைகளையும் அழுகிய பழங்களையும் ஈ கொசுகு மொய்த்த ஆப்பங்களையும் வாங்கிப் புசிக்கின்றனர். அது பெருந் தவறென்பதை நினைவில் வைப்பார்களாக.

அரிய பழமொழிகள்

(1) வாழையாடியும் இலைக்குச் சேதம்
முள்ளாடியும் இலைக்குச் சேதம்.

(2) விழுந்தாலும் எழுந்தாலும் வேறொருவர் கூட்டாகாது.

(3) இலையும் பழுப்பும் எல்லோருக்கு முண்டு.

(4) தலைவன் கலங்கினால் தண்டு கலங்கும்.

(5) எறும்பூரக் கல்லுங் குழியும்---பலதுளி பெரு வெள்ளம்.

(6) பண்டமொரு பக்கம் பழியொருபக்கம்.

(7) காக்கையேறப் பனம் பழம் விழுந்தது.

(8) வாய் வாழைப்பழம் கைக் கருணைக்கிழங்கு.

(9) சாகிற பேருக்குச் சமுத்திரங் கால்வாய்.

(10) நண்டு கொழுத்தால் வளையி லிராது.

கொசு

(1) கொசுவின் கடியினால் நோயுண்டாகுமென்று அநுபவமுடைய பெரியார் கூறுகின்றார். ஆதலால், கொசு நம்மைக் கடிக்காதிருக்கும்படி நாம் நம்முடைய தேகத்தை இரக்ஷித்துக் கொள்ளவேண்டும். கொசு ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவர்களைக் கடித்து ஜ்வரஜீவியை உட்கொண்டு அபிவிர்த்தியாகச் செய்து பிறகு தேக ஆரோக்ய முடையவரைக் கடித்து அவர்களுக்கும் ஜ்வரத்தை யுண்டுபண்ணும்.

நமது வீடுகளிலும் மரம் செடி புல் முதலிய சஸ்ய வர்க்கங்களிலும் கொசுக்கள் பகலெல்லாம் வசித்திருந்து இரவில் நம் வாசஸ்தலங்களை அணுகி நம்மைக் கடித்து ஹிம்சிக்கும். இரவில் கொசுகுகள் மனுஷ்ய ரத்தத்தைப் புசிக்கவருவதால் பகலில் நமது திருஷ்டிக்குப் புலப்படா வண்ணம் போய் விடுகின்றன. நமது இரத்தத்தை இச்சிப்பது பெண் கொசுவேயன்றி ஆண் கொசுவல்ல வென்று மேதாவிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆண் கொசு மடிந்து அழுகிப்போன மாம்சம் இலை முதலியவற்றைப் புசித்து ஜீவிக்கின்றது. பெண் கொசு பகலில் தன் இனம் பெருகக் குட்டைகள், குளங்கள், சிறிய ஜலாதாரங்கள்

சேறும் நீரும் கலந்து நிற்குமிடங்கள், பாத்திரங்கள் சுத்தி செய்தோ ஸ்நானம் செய்தோ வீட்டி னருகி லோடும் நீர்த்தாரைகள் (புல்லும் செடியுமுள்ளதாய் நீரோடிக் கொண்டிருக்கும் வாய்க்கால்கள்) இவ்விடங் களைத் தேடியடைந்து முட்டைக ளிடுகின்றன.

இம்முட்டைகளைக் காப்பாற்ற கொசு அவ்விடங் களி லிருப்பதில்லை. அம்முட்டைகள் சிலமணி நேரத்திற் குள் சிறிய ஜீவிகளாய்ப் புழுப்போல் நீரில் அங்கு மிங்கும் குதித்து விளையாடுவதும் நீரில் முழுகுவதும் சுவாசம் உட்கொள்ள ஜலத்தின்மேற் கிளம்புவது மாயிருக்கும். இக்கொசுப் புழுக்கள் காலங்குல நீளமும் இரண்டு மயிரிழைப் பருமனுமாய் ஒருபக்கத்திற் சிறிய தலையும் மற்ற பக்கத்திற் கூர்மையான வாலும் உடை யனவா யிருப்பதால் அவற்றைக் கண்டு கொள்வது சுலபமா யிருக்கும்.

கொஞ்சநாட் சென்றபிறகு கோல்போன்ற புழுத் தேகம் நீங்கிக் கூன்முதுகுடைய நீர்ப் பூச்சியாய்க் கொசுப்புழுக்களைப்போல் நீரில் விளையாடிக் கொண் டிருந்து ஒன்றிரண்டு நாளில் பூச்சிவடிவமாயிருந்த தை விட்டுக் கொசுவடிவாய்ச் சிறிது நேரம் ஜலத் தின்மேல் நின்று இளைப்பாறிப் பிறகு இரைதேடுவதற் காகப் பறந்துபோய்விடும். இவ்வாறு உற்பத்தியாகும் கொசுக்கள் பலவகையாகும்.

(செந்தமிழ்.)

அவசரக்கோலம் அள்ளித்தெளி

"அவசரக்கோலம் அள்ளித்தெளி"— என்று பெண் பிள்ளைகள் பழமொழி சொல்வதுண்டு. இது எப்படி வந்தது?—

ஓர் ஊரில் ஒரு பணக்காரனிருந்தான். அவன் வீட்டிற்கு ஒரு நாள் ஒரு கிழவி வந்தாள். அப்பொழுது அந்த வீட்டுப் பணக்காரன் ஊரிலில்லை. அவனுடைய மனைவி மாத்திரமிருந்தாள். அவள் பெயர் குமுத வல்லி. குமுதவல்லிக்கு இரண்டு பெண்கள். இரண்டு பெண்களுக்கும் விவாகம் நடத்த ஏற்பாடு நடந்து வரு கிற சமயம் இது.

அந்தக் கிழவி வந்ததும் குமுதவல்லி "நீ யார்? எங்கே வந்தாய்? உன் பெயரென்ன?" என்று கேட்டாள்.

கிழவி— நானொரு பாட்டைசாரி. இன்று இரவு இங்கே தங்கி விட்டுப்போக உத்தேசமாய் வந்தேன். என்னுடைய ஊர் கிழக்குச் சீமையிலுள்ள கும்ப கோணம்—என் பெயர் அம்மாமிப் பாட்டி என்றாள்.

குமுதவல்லி— "ஐயோ பாவம்! மகாராஜியாய்த் தங்கி விட்டுப்போ அம்மா?– போகிறபோது வீட்டை யும் வாசலையும் தலையிலா கட்டிக்கொண்டு போகிறோம்" —என்று கூறி வீட்டுக்குள் அழைத்துப் பேசிக் கொண் டிருந்தாள்.

பல பேச்சுகள் பேசிக்கொண்டிருக்கையில் குமுத வல்லி, "பாட்டி, உனக்குப் பாட்டுத் தெரியுமா?" என்று கேட்டாள்.

கிழவி— எனக்குப் பாட்டுத் தெரியாது, நன்றாய்க் கோலம் போடுவேன்; விதவிதமாகப் போடுவேன்— என்றாள்.

குமுதவல்லி — பாட்டி, என்னுடைய பெண்களுக்குக் கலியாணம் வருகிறது. இன்னும் ஒரு மாதமிருக்கிறது. அப்பொழுது வீட்டில் விதவிதமாய்க் கோலம் போட ஒருவருமில்லை. நீ அதுவரையில் இங்கேயிருந்து கல்யாண சமயத்திற் கோலம் போட்டுக் கல்யாணத்தைச் சிறப்பாய் நடத்திக் கொடுக்கவேண்டும். உனக்கொரு குறைவுமிராதிங்கே! உனக்கு வேண்டிய சௌகரியமெல்லாம் என் ஆத்துக்காரர் செய்து தருவார். நீ இருந்து விட்டுத்தான் போகவேண்டும்— என்றாள்.

கிழவி — இதற்கென்ன வந்தது? இது ஒரு பிரமாதமா? மனித ஜன்ம மெடுத்து ஒருவருக்கொருவர் உபகாரமாயில்லா விட்டால் என்ன பயன்?— உன்னிஷ்டப்படி இருந்து விட்டுப் போகிறேன் — என்றாள்.

அப்பால் கிழவிக்கு ஆசார உபசாரங்களுடன் போஜனமும் வசதியும் ஏற்பட்டன. கிழவி நன்றாய்த் தின்று கொழுத்தாள். கிழவி கொழுப்படைவதற்கும் கல்யாணம் வருவதற்கும் சரியாயிருந்தது.

கல்யாணம் நாளைக்கென்று நெருங்கி விட்டது. குமுதவல்லி பாட்டியை அழைத்து வீடு முழுவதும் கோலம் போட்டு அலங்கரிக்கும்படி கேட்டுக் கொண்டாள். கிழவி, "இதோ ஒரு நொடியில் — இதோ ஒரு நொடியில்" — என்று சொல்லிக்கொண்டே வந்தாள். கல்யாணம் இதோ இன்னும் இரண்டுமணி நேரத்திலென்று சொல்லும்படி நெருங்கியது. சீக்கிரம் கோலம் போடும்படி கிழவியை யாவரும் அவசரப்படுத்தினர். கிழவி உடனே கோலப்பொடியை யெடுத்து அள்ளி அள்ளி நெடுகலும் தெளித்தாள். எல்லோரும் "என்ன இப்படி தெளிக்கின்றாய்? இதுதானா கோலம் போடுவது?" என்றார்கள்.

கிழவி — நீங்களெல்லாம் இப்படி அவசரப்படுத்தினால் என்னால் எப்படி கோலம் போட முடியும்? "அவசரக் கோலம் அள்ளித் தெளி" என்பார்கள் கேட்டதில்லையா? அப்படித்தான் செய்ய முடியும்?— என்று சொல்லி விட்டுப் பொட்டென மறைந்து விட்டாள் அவ்வீட்டை விட்டு. அதுமுதலாகத்தான் "அவசரக் கோலம் அள்ளித் தெளி" எனகிற பழமொழி யேற்பட்டதடி — என்று வம்பர் மகாசபையில் அக்ராசனம் வகித்த — சுப்புலட்சிமி சொன்னாள்.

அந்தக் கூட்டத்திலிருந்த சங்கரி "இந்தப் பழமொழிதான் இப்படி வந்தது? 'நாய்க்குத் தெரியுமா ஒரு சந்திப்பானை' இந்தப் பழமொழி எப்பொழுதேற்பட்டது?" என்று கேட்டாள்.

சுப்புலட்சுமி — அடுத்த வாரம் கூட்டத்தில் இதைப்பற்றிச் சொல்லுகிறேன் — என்றாள்.

பொறுமையினால் வந்த தீங்கு

ஒரு கிராமத்தில் ஒரு மாது தனிக்குடித்தனம் நடத்தி வந்தாள். அவளுக்கு ஒரு புதல்வனிருந்தான். ஆனால் அவன் பரமஏழை; அதனால் அவள் தனக்குச் செல்வப்பெருக் குண்டாக வேண்டுமென்று கடவுளைச் சதா காலமும் தியானஞ் செய்து வந்தாள். கடவுள் அவளிடம் இரக்கங்கொண்டு, அவள் வீட்டு முற்றத்தில் ஒரு பொற்பாளத்தைக் கொண்டுவந்து போட்டுவிட்டு மறைந்தார்.

அந்த மாது அதைக்கண்டு வியப்படைந்து, "இது எப்படி நம் வீட்டுக்கு வந்தது? இது யாருடைய சொத்தோ தெரியவில்லை. இதனை நாம் எடுத்துக்கொள்வது தவறு. அரசனிடம் தெரிவிப்போம். பின்னர் அரசனுடைய கட்டளைப்படி நடப்போம்" என்று கருதி அதை யெடுத்துக்கொண்டு அரண்மனைக்குப் போய் அரசனைக்கண்டு பணிந்து தங்கப்பாளத்தைக் காட்டி நடந்ததைச் சொன்னாள்.

அரசன் நல்ல குணங்களுக் கிருப்பிடமா யிருந்த படியால், அவன் அவ்வேழை மாதை நோக்கி, "மாதே, இதனைக் கடவுள் உனக்குக் கொடுத்திருக்கிறாரென்று ஊகிக்கிறேன். நீயே வைத்துக்கொண்டு சுகமாயிரு" என்றான். அம்மாது பெருமகிழ்ச்சியுடன் அரசனை வணங்கி அப்பாளத்தை எடுத்துக்கொண்டு வீடுபோய்ச் சுகமா யிருந்து வந்தாள்.

இந்தச் செய்தி கிராமமெங்கும் பரவியது. அப்பால் இன்னொரு வீட்டு மாது தானும் அப்படி பொருள் தேட ஆசைகொண்டு கடவுளைப் பிரார்த்தித்தாள். அவள் ஏழையல்ல. அன்ன வஸ்திரத்துக்குப் போதுமான சொத்துடையவள். வீண் பொறுமையினால் இப்படி ஆசைப்பட்டாள். கடவுள் எல்லாம் அறிய வல்லவரல்லவா? ஆகையினால் அவர் அவள் வீட்டு முற்றத்தில் ஒரு மானிடனுடைய பிணம் விழுந்து கிடக்கும்படி செய்தார்.

அந்தப் பிணத்தைக்கண்டு அவள் அச்சங்கொண்டு அதை அப்புறப்படுத்த முயன்றாள். அவள் முயற்சியெல்லாம் வீணாயின. பின் ஊரார் கூடினர். எல்லோரும் சேர்ந்து அதை அப்புறப் படுத்த முயன்றனர். அப்பிணம் அவர்கள் தூக்குகையில் கட்டைபோல் விரைப்பா யெழுந்து நின்று "நான் சும்மா போவேனோ? கொட்டு முழக்குகள் வைத்தாலன்றிப் போகேன்" என்றது.

இதுகேட்டு யாவரும் வியப்படைந்து, அம்மாதைப் பார்த்து "உன் வீட்டில் ஏதோ தெய்வகுற்றம் நடந்திருக்கிறது. உண்மையைச் சொல்" என்று கேட்டார்கள்.

அம்மாது உண்மையைச் சொன்னாள். ஊரார் அதுகேட்டு, "பொறுமைக் குணத்திற்கும், அதிக ஆசைக்கும் கடவுள் விதித்த தண்டனை யிது; கொட்டு முழக்குகளுக் கேற்பாடுசெய்! வேறு ஆலோசனை செய்யாதே! இல்லாவிட்டால் பிணம் வீட்டை விட்டுப் போகாது" என்றார்கள்.

அப்பால் அம்மாது தலையி லடித்துக்கொண்டு கொட்டு முழக்குகளுக்கு ஏற்பாடு செய்தாள். பிறகு அப்பிணம் சுடுகாடு போய்ச் சேர்ந்தது—என்று ஒரு கிழவி ஈரோட்டில் ஹைமவதிக்குச் சொன்னாள். ஹைமவதி பாலவிநோதினிக்குச் சொன்னாள். நான் என்னை நேசிப்பவர்களாகிய உங்களுக்குக் கூறினேன். பொருமையும் ஆசையும் என்றும் நன்மையைக் கொடுக்க மாட்டா—என்பதை மறவாதேயுங்கள்.

(பாலவிநோதினி)

Good Advice to Preachers

1. Don't be afraid of the evil.
2. Don't be afraid of yourself.
3. Don't hold yourself too cheap.
4. Don't try to do any body's duty but your own.
5. Don't spare the people's pocket, for therein lie their heart.
6. Don't expect the sun to shine through all the 24 hours of the day.
7. Don't expect that all your geese will be swans or all your believers to be saints.
8. Don't drive but lead.
9. Don't make anyone work harder than you do yourself.
10. Don't be angry always.

சென்னை-600 008

கலீபா உமர் இப்னு அப்துல் அஜீஸின் பயபக்தி

உமர் இப்னு அப்துல் அஜீஸ் தமது கிலாபத்து ஆட்சியின்போது ஓர் இரவில் உளவாளப் போலீஸாரின் ரிபோர்ட்டுகளைப் பார்வை யிடுவதில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அவருடைய வீட்டுக்கு வேலைக்காரனொருவ னோடிவந்து ஹஸரத் அவர்களுக்கு முன்னே நின்று 'பேகம் சாஹிபா' என்று பேச ஆரம்பித்தான். இதற்குள் கலீபா அவர்கள் தமக்கு முன்னே வைக்கப் பட்டிருந்த விளக்கை அணைத்துவிட்டு "ஓ ஆண்டவனுடைய அடியவனே! இச்சந்தர்ப்பத்தில் நீ என்னிடம் வந்து பேசலாமா? இந்த நாகரிகம் உனக்குத் தெரியவில்லையே! நீ சொல்லவந்த செய்தியை விளக்கை அணைக்காமல் நான் செவியுறத் தலைப் பட்டிருப்பேனானால் இதுவரையில் பெரிய குற்றவாளியாகப் போயிருப்பேன். இந்த விளக்கி லெரியும் எண்ணெய் பொது ஜனங்களுக்குச் சொந்தமான பண்டிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. இவ்விளக்கின் வெளிச்சத்தில் என் சொந்த வீட்டின் செய்திகளைக் கேட்பேனானால் நாளைக்குக் கியாமத்தில் பொதுநிதிக்குச் சம்மந்தப்பட்டுள்ள யாருக்கும் வகைசொல்ல வேண்டாமா?" என்று கூறியனுப்பி அப்பால் தம் அலுவலைக் கவனித்தாராம்.

பிள்ளைகளே! பெரியோர்கள் பலருக்குப் பொதுவான சொத்தை உபயோகிப்பதில் இவ்வளவு ஜாக்கிரதை யெடுத்து வந்திருக்கிறபடியால் நீங்களும் பொது சொத்தில் ஆசைவையாமல் கிரமப்படி நடந்து கொண்டு பெருமையடைய முயலுங்கள்!

மகாத்மா காந்தியும் சிறையிலிருக்கிற இச்சமயம் சர்க்கார் காகிதத்தைத் தம்முடைய சொந்தத்திற்கு உபயோகிப்பதில் விருப்பமில்லாதவராய்த் தம்மிடமிருந்த ஒரு சிறு காகிதத்தையே தாமெழுத வேண்டிய ஒரு லிகிதத்திற்கு உபயோகித்திருக்கிறார். சர்க்கார் காகிதம் பொது சொத்தென்பது அவர் கருத்து.

நன்மாணாக்கர்

மதுவுண்டல் மடிகளவு பொய்மைகோபம் புத்தி
மந்தமிவை யில்லார்களாய்
வண்புனல் கலந்த தேனும் புனல்விடுத்தமிழ்தை
மாந்து மலரன மனையராய்
கதுமெனக் காலத்தினாற் சென்று குரவனைக்
கண்டு வழிபாடு செய்கை
காதலி னவன்குறிப் பின்வழிச் சேர்கைதா
கற்குநிலை யசைவிலாமை
சதுர்கொள் பாடம் போற்றல் கேட்டவை நினைத்தலெத்
தகைய நூலோது கெனினும்
தடுமாற்ற மின்மை வாசகதாட்டி வினவுபொருள்
தகவிடை கொடுக்கும் வண்மை
பதுமலரின் வண்டென நயந்து நன்னெறியொழுகு
புதல்வர் நன் மாணாக்கராம்
புனவள்ளி தெய்வயானைக்கு மணவாளனே
போரிவடிவேன் முருகனே—

(திருப்போரூர்ச் சதகம்)

பெண்கள் குண ஆராய்ச்சி

பளபளப்பான கண்களோடும், சிறந்த தேகபலத்துடனும் கூடிய அழகிய ஒரு பெண் யாராருக்கு எந்தெந்த வேலையில் சாமர்த்தியம் இருக்கின்றதோ அவைகளை அறிவதற்காக ஏற்பட்டிருக்கும் காரியாலயத்தின் 8-வது மாடியில் நின்றுகொண்டு லண்டனிலுள்ள பெண்களின் வேலை சாமர்த்தியத்தைப் பற்றிப் பேசினாள். அவள்தான் ஸ்ரீமதி ராப்ஹீல். அவளுடைய வேலை உலகிலுள்ள வேலைகளி லெல்லாம் மிகவும் அழகானதாக இருக்கின்றது. அவள் காரியாலயங்களிலும், ஷாப்புகளிலும் வேலைசெய்துவரும் பெண்களைக் கூட்டங் கூட்டமாகப் பரீட்சை செய்து ஒரு பெண் ஏன் சந்தோஷ முடையவளாக இருக்கின்றாளென்றும், ஒரு பெண் ஏன் அதிருப்தியுள்ளவளாக இருக்கின்றாளென்றும், ஒருத்தி திறமை யுடையவளாக இருக்க மற்றொருத்தி அஃதின்றி ஏன் அழகுடையவளாக மாத்திரம் இருக்கின்றாளென்றும் கண்டு பிடித்து விடுகிறாள். ஒவ்வொருவருக்கும் தகுந்தாற்போல் வேலைகள் கொடுக்கப்பட்டால் இம்மாதிரி வித்தியாசங்களும், வேற்றுமைகளும் இராவென்றும் அவள் நம்புகிறாள்.

"ஈவினிங் நியூஸ்" பத்திரிகைப் பிரதிநிதியிடம் மேதாவி என்ற பட்டம் சித்திரக்காரர்களுக்கும் சங்கீத வித்வான்களுக்கும் மட்டும் ஏன் கொடுக்கப்பட வேண்

டும்?" என்று ஸ்ரீமதி ராப்ஹீல் கூறினாள். ஒரு கணக்குப்போடும் மெஷினில் வேலை செய்துவரும் பெண் ஒருத்தி லண்டனில் இருக்கின்றாள். அவள் சென்ற 8 வருஷகாலமாக அந்த மெஷினில் வேலை செய்தபோதிலும் இதுவரையில் ஒரு தப்புக்கூடச் செய்ய வில்லை. இதுவே மேதாவித்தனம். இதைக் காட்டிலும் மேதாவித்தனம் வேறுண்டா? வேலைகள் செய்கின்ற பெண்களில் சிலரே வேலைக்குத் தகுதியாக இருக்கின்றனர். சிலர் அவ் வேலைகளைச் செய்வதற்குத் திறமையில்லாதவர்களாக இருந்து வருகின்றனர். பெண்கள் செய்யும் வேலைகளுக்கு அவர்கள் தகுதி யுடையவர்களாக இருக்கின்றார்களா வென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. ஒரு பெண் செய்கின்ற வேலைக்கு அவள் தகுதியுள்ளவளாக இல்லையென்று நமக்குத் தோன்றினால் அவள் எந்த வேலை செய்வதற்குத் தகுந்தவள் என்பதை நாம் நிர்ணயித்தல் அவசியம்.

"திறமைக்குத் தகுந்தாற் போல் பெண்களை வேலைக்கு நியமிப்பதின் அவசியத்தை ஜனங்கள் அறிந்து கொள்வதில்லை. திறமைக்குத் தக்கபடி வேலை பெறாத பெண்ணே அதிருப்தியுள்ளவளாக இருக்கின்றாளே யன்றித் திறமையுள்ளவள் அப்படி யில்லை.

பிள்ளைகளின் திறமையையும் பெண்களின் திறமையையும் பரிசீலனை செய்ததில் அவர்களுடைய திறமை, சாமர்த்தியங்களில் வித்தியாசங்க ளிருப்பதாகத் தெரியவில்லை. "ஒரு பையனுக்கு வேலை செய்யக்

கூடிய சக்தி அதிகமா யிருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணிற்கு உயர்ந்த கற்பனாசக்தி மிகவும் அதிகமாக இருக்கக்கூடும்" என்று ஸ்ரீமதி ராப்ஹீல் கூறினார். ஆனால் இரண்டும் ஒன்றே யாகும். பெண்கள் மனிதர்கள் போல் திறமையுடன் வியாபார உலகில் முன்னேற முடியுமா வென்று நீங்கள் யோசிக்கக் கூடும். அது திறமையை மட்டும் பொறுத்ததாக இருந்தால் பெண்களாலும் அம்மாதிரி செய்யக்கூடும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். மற்ற விஷயங்களை யெல்லாம் நீங்கள் இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். கல்யாணமானவுடன் பெண்கள் தாங்கள் செய்து வரும் வேலைகளை விட்டு விடுகின்றனர். ஆனால் மனிதர்கள் அம்மாதிரி செய்கிறார்க ளில்லை. 300 டைப்பிஸ்டுகள் டாக்டர். டபிள்யூ. ஜே. பினார்டினால் சோதிக்கப்பட்டனர். அதில் ஒரு சோதனை "எஸ்" பரீட்சையாகும். பெண்கள் எந்தெந்த வேலைகளுக்குத் தகுதியுள்ளவர்கள் என்பதைப் பரீட்சைமூலம் கண்டுபிடிக்க இந்த ஸ்தாபனத்தில் பலவித வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

(தமிழ் நாடு.)

வெள்ளைப் பூண்டின் குணம்

"சந்நியொடு வாதம் தலை நோவு தாளின்வலி
மன்னிவரு நீர்க்கோவை வன்சீதம்- அன்னமே
உள்ளுள்ளிக் காண்பாய் உளைமூல ரோகமும் போம்
வெள்ளுள்ளி தன்னால் வெருண்டு."

வெங்காயம்

வெங்காயத்தைப்பற்றி நம் நாட்டில் சிறுவர்களும் ஏதாவது கொஞ்சம் தெரிந்துகொண்டிருப்பார்களென்பதில் ஐயமில்லை. வெங்காயம் செடியின் அடியில் கிழங்கு கிழங்காய் வேரில் உருளைக் கிழங்குபோல் விளைவது. இதில் பெருவெங்காயம் (உருளையினும் பெரிது) சிறுவெங்காயம் (சிறுகோலியளவினது) வெள்ளை வெங்காயம், சிவப்பு வெங்காயம்—எனப் பிரிவுகளுண்டு.

நம் நாட்டில் வெங்காயத்தை அநேகமாக யாவரும் கறிகாய் வர்க்கங்களுடன் வெகு காலமாக உபயோகித்து வருகிறார்கள். இது உடம்புக்குப் புஷ்டியையும் குளிர்ச்சியையும் தரத்தக்க நல்ல காய்கறியைச் சேர்ந்ததாகும். இதனால் கெடுதி விளைவதில்லை. நீடித்தகால உபயோகத்தில் புத்திமந்த மேற்படுமென்று வைத்திய சாஸ்திரம் கூறுகிறது. மரக்கறி சாப்பிடுகிறவர்களைவிட மாமிசம் புசிப்பவர்கள் இதனை அதிகமாக உபயோகிக்கிறார்கள். இதனை நெய்விட்டு வதக்கிச் சர்க்கரை சேர்த்துத் தின்றால் வயிற்றுக் கடுப்பு, மூல உஷ்ணம்—முதலியன நீங்குகின்றன. இதனைப் பச்சையாய் நறுக்கித் தயிரிற்போட்டுத் தாளித்து உபயோகிப்பதுமுண்டு. தயிரன்னத்தில் நறுக்கிப்போட்டுப் பிசைந்து உண்பதுமுண்டு. பருப்பு சாம்பாரில் போடுவதை யாவரும் கையாண்டு வருகின்றனர். அநேகர் வருஷமுழுவதுக்கும் உபயோகப் படுத்தக்கூடிய வகையில் இதனைச் சம்பாரச் சரக்குகளுடன் சேர்த்து வடகம்போல் செய்து வைத்துக் கொள்ளுகின்றனர்.

இது உணவுப் பொருளாயிருப்பது மல்லாமல் சிறந்த மருந்துச் சரக்கு—

இதில் சிறுவெங்காயம் மருந்துக்கேற்றது. சிறுவெங்காயத்தைத் துண்டு துண்டாய் நறுக்கிச் சிற்றாமணக்கெண்ணெயிலே போட்டுப் பின் பனங்கற்கண்டு அளவுப்படி சேர்த்துச் சூரிய புடமாகச் சிலநாள் வைத்திருந்து சிறுகுழந்தைகளுக்குத் தினம் இரண்டு முறை வெங்காயத் துண்டுகளை எண்ணெய்ச் சகிதப்படன் கொடுத்தால் நன்றாய் மலங் கழிவதுடன் குழந்தைக் கிருக்கும் கணைச்சூடு, ஒட்டு மூத்திர உபத்திரவம் முதலியவைகளை நீக்கிக் குழந்தைகட்குப் புஷ்டியைத் தந்து நன்றாய் வளர்க்கிறது. இது பலர் அநுபவத்திலே கண்ட ஔஷதமுறை. பெரியவர்களுடைய கெட்ட நோய்களையும் இது சொஸ்தப்படுத்தும். இன்னும் பலவிதத்திலும் வெங்காயம் நமக் குபயோகமுடையதாகும்.

இது சாதாரணமாக மேட்டுப்பாங்கான இடங்களிலும் விளையக் கூடியது.

இதனை நம் நாட்டில் விசேஷமாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் ஏராளமாகப் பயிரிடுகிறார்கள். இது பயிரிடக்கூடிய நிலத்தை நாலைந்துசால் உழுது புல் பூண்டு முதலியவைகளை நீக்கிப் பின் செவ்வையாகக் கொத்

திப் பூமியைத் திருத்திப் பின் பூமியை ஆறும்படி சில நாள் விட்டுவைத்துப் பின் குளத்து வண்டல், ஆற்று வண்டல், ஆடு மாடுகளின் எரு, மீன் ஓடுகளின் குப்பைகள், தழைகள், முதலிய எருவிட்டு, அப்பால் பாத்திகட்டிப் பாத்தியில் நாலங்குலத்துக் கொன்றாக விதைபோடவேண்டும். பின் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மூன்று நாளில்குருத்துவெளிக்கிளம்பிவிடும். சுமார் பத்துநாள் வரைக்கும் தினம் தண்ணீர் விட்டுக் கொண்டு வரவேண்டும். இரண்டு வாரங் கழித்தவுடன் களையெடுத்தல் வேண்டும்.

ஆடிமாதமும் தைமாதமுமே விதை போடக் காலம். இதற்குத் தினந்தோறுந் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய சிரமமில்லை. நாலுமாதத்திற் பலனெடுக் கலாம். ஒரு பயிருக்குப் பட்டணம்படி அரைப்படி வெங்காயம் கிடைக்கும்; காற்படிக்கு மோசமில்லை. இந்த வெள்ளாமையில் தக்க லாபமுண்டு.

ஸ்த்ரீகளும் சிறுவர்களும் தத்தம் வீட்டுக் கொல்லைப்புறத்தில் இதனைச் சுலபமாய்ப் பயிர்செய்யலாம். வீட்டுக்கு வேண்டியஅளவு வெங்காயம் தேடிக்கொள் ளலாம். இப்படி அனேகம் பயிர்களுண்டு வீட்டிலேயே பயிரிட. நம்மவர் கவனிப்பதில்லை. கவனஞ் செலுத்தி னால் தக்கபடி லாபமும் சௌகரியமும் அடையலாம்.

(விவசாயி)

"பூமிதிருத்தியுண்" (ஆத்திசூடி)

ஹாஸ்யம்.

(1) ஸோமாஸ்கந்தன்— கிருஷ்ணபகவான் கோபிகைகள் வீட்டில் வெண்ணெய் திருடினாரல்லவா?— அதற்காக அவரடைந்த தண்டனை யென்ன சொல்லு?

பரமசிவன்—உரலில் கட்டுண்டார்—

ஸோமாஸ்கந்தன்—அதைத்தவிர.

பரமசிவன்—நீசொல்லு.

ஸோமாஸ்கந்தன் — கோவர்த்தனகிரி என்கிற பெரியமலையைத் தலையில் சுமந்துகொண்டு நின்றார்.

(2) ஒருநாள் கந்தனை, அவன் தந்தை தமது பொடி டப்பியை அவனிடம் கொடுத்துவிட்டுச் சற்றுப் பொறுத்துப் பின், "அடே அடபயலே—பொடி டப்பி கொண்டுவா - நான் வெளியே போகவேண்டும்" என்று கேட்டு வெளியே புறப்பட உடை யுடுத்துக் கொண்டு தயாரானார்.

அப்பால் இன்னொருநாள் தந்தை நான்கு பேருடன் பேசிக்கொண் டிருக்கையில் கந்தன் என் கிற ஐந்து வயதுப் பையன், தன்வேஷ்டியை கச்சம் வைத்து உடுத்துக்கொண்டு மேலே ஒரு துண்டுடன் வேகமாகவந்து, "அடே அப்பா, அடே பொடிடப்பி கொடு—நான் வெளியே போகவேண்டும்" என்று கேட்டான்.

கந்தன் தந்தை தலைகவிழ்ந்து தன் குற்ற முணர்ந்து வெட்கச் சிரிப்பு சிரிக்கும்படி நேர்ந்தது. மற்றவர்கள் இடிஇடியென்று நகைத்து—"பேஷ்! பேஷ் தகப்பனுக் கேற்ற பிள்ளை!" என்றார்கள்.

(6) முத்துத்தாண்டவர் கீர்த்தனம்.

இராகம்—ஆகிரி   தாளம்—ஆதி.

பல்லவி

நடனங் கண்டபோதே யென்றன் சடலஞ் செய்த
பாக்கியமையா

அநுபல்லவி

விடமணிந்த கண்டா மன்றுள்—மேவு
மம்பலவாணா

சரணங்கள்

1 அரியயனுந் தேடிக்காணா உருவமாய்நின்றகாரணா
மருமலர்ப் பச்சிலைகொண் டிருகுமன்பர் சிந்தை
யென்று (நட)

2 அன்னை தந்தை நீயென்று உன்னையே மிக
நம்பினேன்
என்னையே நீ காக்கவேண்டும் சொர்ணசபை
நடராஜ (நட)

3 பதஞ்சலி வியாக்ரபாதர் இதயம் புகுந்தாண்ட
வனே
நிதம் பிரியாச் சிவகாமிநேசனே சிதம்பரேசனே
(நட)

சப்பாத்துக் கள்ளி

அல்லது

நாகதாளியின் சில உபயோகங்கள்

இக்கள்ளியானது நமது தேசத்தில் பல பாகங்களிலும் படர்ந்து ஏராளமான நிலங்களை மூடிக்கொண்டிருப்பதால் இதைக் கிருஷிகர் தங்களுக்குக் கெடுதியை உண்டாக்கும் பொருட்டு ஒரு சாபத்தினால் உண்டான பூண்டென்று எண்ணுகிறார்கள். சில இடங்களில் விவசாயத்துக்கு லாயக்கான நிலத்தில் இது பரவி மூடிக்கொண்டிருப்பதால் அந்நிலங்கள் கிருஷிக்கு உபயோகமற்றதாய்த் தற்காலத்தில் ஆய்விட்டன. அநேக கிராமங்களுக்குச் சமீபமாயுள்ள குத்துச்செடிகள் வளரும் குறுங்காடுகளில் இச்செடிகளுக்கு ஊடேயிருக்கும் காலி நிலங்களில் ஜனங்களுக்குப் பிரயோஜனப் படக்கூடிய புல், பூண்டு செடிகள் முதலியவைகளும் அக்காலி இடங்களில் முளைக்கா வண்ணமாய் இது வளர்ந்து மூடிக்கொண்டிருப்பதால் அவ்விடங்கள் உபயோகப் படாம விருக்கின்றன. அநேக கிராமங்களில் வழிபாட்டைகளுக்குச் சமீபமாய் இது படர்ந்து வருஷா வருஷம் அதிகமாய்க்கொண்டு வருவதால் இப்பாட்டைகளும் வழிகளும் அநேகமாய் விஸ்தீரணத்தில் குறுகிக்கொண்டே வருகின்றன. புறம்போக்கு நிலங்களில் இவைகள் ஏராளமாய் வளர்ந்து மூடிக்கொள்வதால் அந்நிலங்கள்

எந்தவேலைக்கும் பிரயோஜன மற்றுப் போகிறது. இந்நாகதாளிப் புதர்களுக்கு மறைவில் போய் ஜனங்கள் மல ஜலங்கள் கழிப்பதால் அவைகள் இதைச் செழிப்பாய் வளரச் செய்வதோடு அக் கிராமத்திற்குச் சுகாதாரக் குறைவும் உண்டு பண்ணுகிறது. ஆகையால் இந்த ராக்ஷஸப் பூண்டைக் கிராமாந்தரங்களிலிருந்து எப்படி நிர்மூலமாக்குவதென்பது கிருஷிகர் ஆலோசனைசெய்து கவனிக்கவேண்டிய விஷயங்களில் ஒன்றாயிருக்கிறது. இங்குமங்கும் இவ்விராஜதானியில் சில இடங்களில் சில தாலுகா போர்ட்டார்களும், ஜில்லா போர்ட்டார்களும் இப்பூண்டை நிர்மூலப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்து கொண்டிருந்தபோதிலும் எல்லாக் கிராமங்களிலும் விவசாயிகளும் இவ்விஷயத்தில் ஒத்தாசை செய்தாலொழிய இதை விசேஷமாய்த் தொலைக்க சாத்தியப்பட மாட்டாது.

கோயம்பத்தூர் ஜில்லாவின் சில பாகங்களில் இந்நாகதாளியை அப்புறப்படுத்தி மண்ணுடன் கலந்து மக்க வைத்து எருவுக்கு லாயக் காகும்படி செய்த பின், கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய பயிர்களுக்குப் புன் செய்களிலும், தோட்டக்கால் நிலங்களில் ராகி, மிளகாய், புகையிலை, கோதுமை, வாழை, கரும்பு முதலிய இறவைப் பயிர்களுக்கும் எருவாய் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் எல்லாக் கிருஷிகரும் இம் முறையைக் கையாடுகிற தில்லை. கிருஷிகர் பயிரிடும் நிலங்களுக்குள் மூலை முடுக்குகளில் இந்நாகதாளி வளர்ந்தாலும் அல்லது வெளியிலிருந்து தங்கள் நிலத்துக்குள் பரவி வந்துகொண் டிருப்பதாய்க் கவனிக்கும் சமயங்களிலேதான் இதை அநேகமாய் அப்புறப்படுத்தி மண்ணுடன் மக்கவைத்து எருவாய் உபயோகிக்கின்றனர். சில கிருஷிகர் தங்களுடைய நிலங்களுக்குச் சமீபத்தில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் அகப்பட்டால் அதை வெட்டி எருவுக்கென்றே சேகரித்து மக்கவைக்கின்றார்கள். ஆனால் இந்த வழக்கம் அவ்வளவு தூரம் கையாடப் படவில்லை. என்றாலும் கிருஷிகர் தங்களுடைய நிலங்களைச் சீர் திருத்துவதற்காக நாகதாளிப் புதர்களுக்குக் கீழே படிந்திருக்கும் மண்ணை (களிமண்ணை) வண்டிகளில் ஏற்றிக் கொண்டுபோய் நிலங்களில் போடும் வழக்கத்தைக் கை யாடுகிறார்கள். புறம்போக்குகளிலும், குளக்கரைகளிலு முள்ள இம் மண்ணை அடித்துக்கொண்டு போகவேண்டிய இடம் அரைமையிலுக்குள்ளிருக்குமாகில் நாகதாளிப் புதர்களை வெட்டி, அப்புறப்படுத்திவிட்டு, அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தி வண்டியில் ஏற்றிக்கொண்டு போவதற்கு வண்டி ஒன்றுக்கு அணா 2 தான் செலவாகும். இப்போது கூலியாட்களுக்கு கூலி அதிகரித்துக்கொண்டு வருவதால் ஒரு வண்டிக்குக் கூலி ஜாஸ்தியாகிக் கொண்டே வருகிறது. நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் மண்ணானது நிரம்ப எருச்சத்துள்ளது என்றால் காற்றில் அடித்துவரும் இலை சருகு முதலியவைகளும் இந்திரிய வஸ்துக்கள் அடங்கிய பொருள்களும் காற்றினால் அடிபட்டுப் பதரினால் தடுக்கப்பட்டு இவைகளின் அடியில் மக்குவதனால்

எருச்சத்து ஜாஸ்தியாகிறது. நாகதாளியிலேயே நூற்றுக்கு 60 பாகம் இந்திரிய வஸ்து இருக்கிற தென்று டாக்டர் லெதர் துரையவர்கள் ரசாயன பரீக்ஷைசெய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வளவு இந்திரிய சத்துள்ள நாகதாளியை அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் சேர்த்து மக்கவைத்தால் அப்படி மக்கின பொருளில் எருச்சத்து ஜாஸ்தியா யிருக்குமென்பதில் சந்தேக மில்லை. நமது நிலங்களில் அநேகமாய் இந்திரிய வஸ்து குறைந்திருக்கின்ற தென்றே சொல்ல வேண்டும். இப்பேர்ப்பட்ட நிலங்களுக்கு நாகதாளியை அதன் கீழ் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் கூட்டி மக்கவைத்து அதை எருவாய் உபயோகப்படுத் தினால் அதிக அநுகூலத்தை உண்டாக்கும். இப்படி நாகதாளியை மண்ணுடன் மக்கவைத்து எருவாக உபயோகிப்பதால் கிருஷிகருக்கு இலேசாய் எரு அகப் படுவதுடன் அநேக விஷயங்களில் பிற்காலம் கெடு தியே உண்டு பண்ணிக் கொண்டிருக்கும் இந்த ராக்ஷ ஸப் பூண்டும் தொலைய ஏதுவா யிருக்கிறது.

நாகதாளியை மக்கவைத்து எருவாக அடியில் சொல்லும் முறைகளைக் கையாடிச் சித்தி பெறலாம்.

(1) ஆறு அடி அகலமும் 3 அல்லது 4 அடி ஆழமும் நமக்கு வேண்டிய அளவு நீளமும் உள்ள பள் ளங்களைச் சாரல் மழைகளுக்குப் பின்னும் தோண்டித் தயாராய் வைத்திருக்க வேண்டும். மழை காலங்களில் கிருஷிகருக்கு வேலை ஒழிந்திருக்கும் சமயங்களில் நாக தாளிப் புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி இக்குழி

களில் நிரப்பி, இக்குழிகளில் இருந்து எடுத்த மண்ணால் மூடிவிட வேண்டும். சில நாட்களுக்குள் குழிகளுக்கு உள்ளிருக்கும் சப்பாத்துக்கள்ளி சற்றுமக்கி அமுங்கும். மண்ணை வெட்டிய இந்த அமுங்கிய இடங்களில் இது ஒரு வருஷத்துக்குள் மக்கி எருவாகும். ஒரு வருஷத் துக்குள் சப்பாத்துக் கள்ளிகளில் இருக்கும் முட்கள் மக்கி இருக்காவிட்டால் இன்னொரு வருஷம் அப்படியே வைத்திருந்தால் அம்முட்கள் நன்றாய் மக்கி விடும்.

(2) மழைகள் குறைவாய்ப் பெய்யும் இடங் களில் கிருஷிகருக்குச் சாவகாசமிருக்கும் போதெல் லாம் நாகதாளியை வெட்டி எங்கெங்கே சௌகரியமா யிருக்குமோ அவ்விடங்களில் குவித்துக் காய விட வேண்டும். அதன்மேல் காய்ந்த புல், சருகு, கூளம் முதலியவற்றைக் குவியல்கள் மேல் பரப்பி நெருப்பு வைத்தால் முட்கள் அநேகமாய்ப் பொசுங்கிப் போகும். இச்சமயத்தில் இக்குவியல்களின் மேல் நாகதாளிப் புதர்களுக்கு அடியில் படிந்த மண்ணைக் கொண்டு வந் தாவது அல்லது அப்பக்கத்தில் அகப்படக் கூடிய மண்ணைச் சேர்த்து மேலே போட்டு மூடி உள்ளிருக் கும் வஸ்து மக்கும்வரை வைத்திருந்தால் இரண்டு மூன்று வருஷங்களில் நிலங்களுக்கு எருவாக உபயோ கிக்கக் கூடிய ஸ்திதியில் வந்துவிடும்.

(3) மேல் சொல்லிய இரண்டு விதங்களும் செய்யப் போதிய இடமில்லா விட்டால், மாடுகள் கட்டி சுண்ணாம்பு அரைக்கும் ஆலைகளைப் போல் அமைத்து சுண்ணாம்புக்குப் பதிலாய் நாகதாளியை

போட்டு சுண்ணும்பைப் போல அரைத்தால் நாக தாளியில் தண்ணீர் அதிகமா யிருப்பதால் அரைமணி நேரத்திற்குள் நன்ருய் அரைபட்டுக் கொள கொள வென்று ஆகிவிடும். அதை மண்வெட்டிகொண்டு அப் புறப்படுத்தி குழிகளில் போட்டு அதன்மேல் மண் கொட்டி மூடி வைத்திருந்தால் ஐல்தியாய் மக்கி எரு வாய்விடும். முட்களும் கட்டமாய் நிற்காமல் படுத் திருக்கு மாதலால் அவைகள் தைக்காது. இப்படி தயார் செய்தால் ஆறுமுதல் எட்டு மாதத்திற்குள் இது எரு வாய் உபயோகிக்க லாயக் காகிவிடும்.

மேலே சொன்ன உபயோகத்தைத் தவிர நாக தாளி வேறு விதமாயும் உபயோக மாகும். நாக தாளியை நறுக்கி வேகவைத்து அப்புறப்படுத்தியபின் இருக்கும் தண்ணீராவது சுண்ணும்புடன் கலந்து வெள்ளை யடிக்க உபயோகப்படுத்தலாம். இப்படி வெள்ளை யடித்த சுண்ணும்பு, சுவர்களில் ஒட்டிக் கொள்ளுகிறதே தவிர மேலே ஒட்டுகிறதில்லை. ஒரு பானை அல்லது சட்டியில் நாகதாளியைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு அது நிரையத் தண் ணீர் ஊற்றிச் சுமார் 3 மணி நேரம்தரையில் நன்ருய்க் கிளறி வேகவைத்து அது ஆறின பின், அதிலிருக்கும் வெந்த தண்ணீரை வடிகட்டி வெள்ளை யடிக்கத் தயார் செய்திருக்கும் சுண்ணும்பு அல்லது கோபிக்கு 150 பாகம் சுண்ணும்பு ஜலத்துக்கு நாகதாளி வெந்து வடித்த தண்ணீர் ஒரு பாகம் ஊற்றிக்கலந்து, வெள்ளை யாவது அல்லது கோபியாவது அடித்தால் அவைகள்

ஜாஸ்தி நிறமாயிருப்பதோடு சுவரிலும நன்ருய் ஒட்டிக் கொள்ளுகிறது. சுவர்களில் ஜனங்கள் சாய்ந்தாலும், அது துணி முதலியவைகளில் ஒட்டிக்கொள்வதில்லை. சாதாரணமாய் சுவர்களின் பக்கத்தில் உட்கார்ந்து அதில் சாய்ந்து கொள்ளும் வழக்கமுடைய நமது இந்திய வீடுகளில் புதிதாய் வெள்ளையடித்திருக்கும் சுவர்களின்மேல் சாய்பவர்களுடைய, துணியிலாவது உடம்பிலாவது ஒட்டாமலிருப்பது ஒரு பெரிய அநுகூலம்.— (கொங்கு வேளாள மித்திரன்)

(ஸ்ரீமாந் ஜே. செல்வரங்க ராஜு.)

பற்பல தேசங்களில் வயது விபரம்

சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து ஜனங்களின் சராசரி வயது 30-ஆக இருந்து இப்போது ஆண் களுக்கு 56-ஆகவும், பெண்களுக்கு 60-ஆகவும் இருக்கின்றது. உலகத்திலேயே நீண்ட ஆயுளை யுடையவர்கள் நியூஜிலந்து தேசத்தாரே யாவர். அங்கு சராசரி வயது ஆண்களுக்கு 63-ம் பெண்களுக்கு 65-மாகும். ஐரோப்பாவில் மற்றதேசங் களைவிட டென்மார்க்கினர்தான் நீண்ட ஆயுளை யுடையவர் கள்; அமரிக்காவில் சராசரி வயது 59-ஆனுல் மிகப் பரிதாப கரமான முறையில் மிகக் குறைந்த ஆயுளையுடைய தேசம் இந்தியா ஒன்றுதான். இந்தியர்வில் ஆண்களுக்கு 22-வயதும் பெண்களுக்கு 23-வயதும் சராசரி வயதாகும். பண்டைக்காலத் தில் ரோமராஜ்யத்தில் ஜனங்களின் சராசரி வயது இவ்வாறு முப்பதாகத்தான் இருந்தது. குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய வியாதிகள் பலவற்றைத் தடுத்ததால்தான் இங்கிலாந்தில் இவ் வாறு சராசரி வயது உயர்ந்திருக்கின்றது. இன்னும் பல வியாதிகளைத் தடுக்கக்கூடிய உபாயங்களைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகும் இங்கிலாந்தில் ஆயிரம் பேருக்கு ஆறு பேர்தான் 80-வயதுக்கு மேலும் ஜீவித்திருக்கின்றனர்.

காட்டும் உமது தந்திரத்தை!

ஒருநாள் ஒரு பூனை ஒரு காட்டில் ஒரு நரியைக் கண்டது; கண்டதும் "ஆகா நரி மிகவும் தந்திரமுள்ள ஜந்து வல்லவா? அதுமிகவும் புத்திகூர்மை யுடைய தென்றும் கேள்விப்பட் டிருக்கிறோம். அதனிடம் சென்று பேசுவோம். புத்திசாலியுடன் பேசுவதற்குச் சமயம் வாய்த்திருக்கிறது. இதை இழக்கலாமா?" என்றுகருதி அதனருகேசென்று "நரியாரே, உமக்கு வந்தனம்! தாம் சௌக்கியமா யிருக்கிறீரா? இந்தக் கஷ்டகாலத்தில் தம்முடைய ஜீவனம் எப்படி நடைபெறுகிறது?" என்று கேட்டது.

நரி அதிக டம்பத்துடன் பூனையைத் தலை முதல் கால்வரையில் உற்றுநோக்கி "ஓ எலிவேட்டையாடும் புலியே! உன்னுடைய தைரியமே தைரியம்! என்னையாவந்து நீ எப்படி ஜீவனம் செய்கிறாய் என்று கேட்கிறாய்! உனக்கு யுக்தியேது! தந்திரமேது! திருடனைப் போல் பயந்து ஒளிந்து கொண்டிருக்கும் குஞ்சுகளாகிய எலிகளைத் தின்பவனல்லவா நீ! உனக்கு என்ன தந்திரம் தெரியும்! எத்தனை தெரியும்! சொல் பார்ப்போம்" என்று கேட்டது.

பூனை பயமடைந்து "எனக்கு ஒரே ஒரு தந்திரந் தான் தெரியும்" என்றது. நரி சிரித்தபடியே பரிகாசம் செய்து "அந்தத்தந்திரம் என்ன" என்று கேட்டது.

பூனை—"என்னை வேட்டை நாய்கள் பிடிப்பதற் காகத் துரத்திக்கொண்டு வந்தால் நான் ஓடி ஒரு க்ஷணத்தில் மரத்தின்மேலேறிக் கொள்வேன்"— என்றது.

நரி—"சை! இதுதானா பெரிய தந்திரம்! இதைவிட மேலான தந்திரம் எனக்குத் தெரியும். என்னிட முள்ள தந்திரங்களை எண்ணவே முடியாதென்று இறு மாந்து கூறுவேன். உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமா யிருக்கிறது. என்னுடன்வா! வேட்டை நாய்களுக்கும் மனிதர்களுக்கும் தப்பித்துக்கொள்வதற்குப் பலதந்திரங்களை உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன்." என்றது.

இச்சமயம் திடீரெனச் சில வேடர்கள் வேட்டை நாய்களுடன் வந்தனர். அவர்களைக்கண்டதும் பூனையானது எகிறிக் குதித்து ஓடி அருகிலிருந்த பெரியமரத்தி லேறிக் கொண்டது.

நரி இன்னது செய்வதென்று தெரியாமல் தத் தளித்தது. அப்போது வேட்டை நாய்கள் வந்து அதைப் பிடித்துக் கொண்டது.

அப்போது பூனை, "நரியாரே, உம்முடமுள்ள அநேகதந்திரங்களில் ஒன்றைக் காட்டுங்கள்! காட்டுங்கள்! ஆபத்தை ஓட்டுங்கள்! கம்பிநீட்டுங்கள். ஜயம் காட்டுங்கள்!" என்று கூறி ஆநந்தக் கும்மியடித்தது.

ஜனங்களில் நரியைப்போல் வீண்டம்பம் பேசிக் கொள்ளும் கயவர்களிருக் கின்றனர். சமயம் வந்தால்

அகப்பட்டுக் கொண்டு விழிப்பதுமன்றி அவமானப் படுவதுமுண்டு. இவர்களுக்கெல்லாம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டு மென்கிற எண்ணமே இராது. மானம் போய்த் தெருச்சிரிக்க நிற்கும்போது தலைகவிழ்வர். அப்பால் தலைநிமிர்ந்து விரைத்த வண்ணமிருந்து அடைந்த அவமானத்தை மறந்து பேசுவார். இப்படிப் பட்டவர்கள் இருக்குமிடத்திற் கூட இருப்பது கூடாது. இப்படிப் பட்டவர்களைக் கண்டால் தூரவிலகியே போகவேண்டும். இவர்கள் தான் தீண்டாதவர்கள், இதைத்தெரிந்து கொள்ள வேண்டும்.

நீ உன்னுடைய இரத்தத்தில் மதுசாரஞ் சேராதபடி சுத்தமாய் வைத்துக்கோள். இப்படி செய்வதால் இரத்தம் வியாதியை வரவொட்டாமல் உன்னைக் காப்பாற்றும்.

பூமிக்குக் கீழுள்ள புதிய கூடம்

இட்டாலியைச் சேர்ந்த ரோமானிய ராஜ்யத்தில் இப்பொழுது பூமிக்குக் கீழாக சுமார் 16 அடி ஆழத்தில் திடீரென மிக்க மனோகரமாய் அமைக்கப்பட்ட கூடமொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்தக்கூடம் மிகவும் நேர்த்தியாக அமைந்திருப்ப தல்லாமல் இப்போதைய தரை மட்டத்திற்கு 16 அடி கீழிருப்பதாகவும் அக்கூடத்தைச் சேர்ந்த அங்க அமைப்புக்களனைத்தும் சிறிதும் பழுதாகாமல் நூதனமாகவே தெரிவதாகவும் சொல்கின்றனர். அரசாங்கத்தார் இப்பொழுது போடவிருக்கும புதியரஸ்தா அக்கூடத்தின் குறுக்காகவே செல்லுவதுபற்றி அதனைப்போட்டு கூடத்தை அழிக்காமலிருக்கக் கருதி வேறு வழியாகத் திருப்ப உத்தேசித்திருக்கிறார்கள். இதற்காகும் செலவு 50,000 பவுனும்.

பண்டைய அரசரின் தெய்வபக்தி

பண்டைக் காலத்தில் ஒரு நாள் தொண்டைமான் சக்ரவர்த்தி தம் படைகள் புடைசூழப் புறப்பட்டுச் சிவ ஸ்தல யாத்திரை செய்து வந்தான். இப்பொழுது **திருமுல்லைவாயில்** என விளங்கும் சிவஸ்தலம் அக்காலத்தில் சிறியதொரு காடாயிருந்தது. சக்ரவர்த்தி அந்நாட்டிற்கு அருகே வருகையில் மாலைக்காலம் சமீபித்தது. அதனால் அவர் தம் படைகளோடு ஒரு புறத்தில் பாடி வீடமைத்துக்கொண்டு அதிற்றங்கி உணவுண்டு உறங்கினர்.

அரசன் படுத்தவுடன் மணியோசை கேட்டது. "ஓகோ இங்கே சிவாலய மிருக்கின்றது போலும்! அதனாலேதான் இந்த மணியோசை கேட்கிறது. நாம் காலையில் அச்சந்நிதிக்குச் சென்று தரிசனம் செய்ய வேண்டும்" என்றெண்ணிக்கொண்டயர்ந்து நித்திரை செய்து மறுநாட் காலையிலெழுந்ததும் தம் அதிகாரிகளையழைத்து அதைப்பற்றி விசாரிக்கும்படி கட்டளையிட்டான்.

அவர்கள் சென்று அங்கே காட்டில் வசிப்பவரை விசாரித்தனர். அவர்கள், "ஐயன்மீர், இவண் சிவாலய மொன்றுமில்லை. வேளாளருக்கு இருபத்து நான்கு கோட்டங்களுண்டு. அந்த இருபத்து நான்கனுள் புழற்கோட்டமென்பதொன்று. அது இதோ இங்கே இவ்வனத்திற் கருகிலுள்ளது. அக்கோட்டத்தில் அதற்குத் தலைவ

ராகிய வாணன் ஓணன் என்பவரிருக்கின்றனர். அவர்கள் நிகரற்ற வீரர்கள்; மிகக் கொடியவர்கள். அவர்களுக்குக் கோட்டையுண்டு. அக்கோட்டைவாயிலின் கதவுகளில் வெண்கல மணிகள் அமைத்திருக்கின்றனர். அக் கதவுகளைச் சாத்தும்போது அம்மணியோசை கேட்டிருக்கும் உங்களுக்கு" என்றனர்.

இராஜாதிகாரிகள் "அப்படியா! நல்லது" என்று கூறி விடைகொண்டு அரசனிடம் வந்து தெரிவித்தனர். அரசர் பெருமான் உடனே தம் படையுடன் புறப்பட்டுச் சென்று அவ்வீரர்களை எதிர்த்தான். வீரர்கள் வேந்தர் பெருமானுடைய படைகளை யெல்லாம் கொன்று அதமாக்கி வெற்றி பெற்றனர். வேந்தர் பெருமான் தப்பிப் பிழைக்க வெண்ணி ஒரு யானையின் மீதேறிக்கொண்டு காட்டில் ஒரு பக்கமாய்ச் சென்ருன்.

அப்பொழுது அந்த யானையின் கால் ஓரிடத்தில் அடர்ந்து படர்ந்திருந்த முல்லைக்கொடியிலே சிக்குண்டது. உடனே அரசன் யானையின் மீதிருந்தபடியே அந்த முல்லைக்கொடியைத் தன் கை வாளால் வெட்டினன்.

அந்த வெட்டு அக்கொடியின் கீழே மறைந்திருந்த சிவலிங்கத்தின்மீது பட்டு உதிரம் பெருகியது. அரசன் அவ்வுதிரத்தைக்க கண்டு வியப்பும் அச்சமும் அடைந்து கீழிறங்கிப் பார்க்கையில் ஒரு சிவலிங்கத்திலிருந்து இரத்தம் பெருகுவதறிந்து ஆற்றமுடியாத துயரமுற்று, "அந்தோ மாசிலாத மணியாகிய உமது திருமேனியில் மாசுண்டாகச் செய்த கொடியவனுகிய நான் இன்னும் உயிருடனிருக்கின்றேனே! இதுதான் அடியேனுடைய அடிமைத் திறம்போலும் நன்று! நன்று!! இனி நான் உயிருடன் வாழ்வது தகுதியன்று" என்று கூறித் தன் கை வாளால் கழுத்தை வெட்டிக் கொண்டிறக்க ஆயத்தமானன்.

உடனே சிவபெருமான் அவ்வரசன் முன்னே விருஷப வாகனத்தின்மீது பார்வதி ஸமேதராய் எழுந்தருளி, "அன்பனே, நின்னால் மாசுபடினும் யாம் என்றும் மாசிலாமணியே யாவோம். இதோ நமது நந்தியை அனுப்புகின்ருேம். நந்தியைத் துணை கொண்டு சென்று உன்னை வென்ற வீரர்களை வென்று அவர்களை உன்னுடன் சேர்த்துக்கொண்டு வந்து இங்கேஓர் ஆலயங் கட்டுவித்திடுக!" என்று கட்டளையிட்டு மறைந்தார்.

உடனே அவ்விடத்தில் நந்திதேவர் பிராப்தமானர். அரசன் பெருமகிழ்ச்சியுடன் அவரைப் பணிந்து அவர் துணை கொண்டு சென்று அவ் வீரர்களை எதிர்த்துப் பொருது வெற்றி பெற்று அப்பால் அவர்களுடன் உறவு பூண்டு 'இறைவன் ஆக்ஞைப்படி ஓர் அழகிய ஆலயம் விரைவில் கட்டி முடித்து மகிழ்ந்தான்.

சிவலிங்கம் முல்லைக்கொடியின் கீழிருந்து அகப்பட்டபடியால் அரசன் அக்கோயிலுக்குத் திருமுல்லைவாயில் என்று பெயரிட்டுத் தன் நகர் சென்று அவ்வாலயத்தில் பூசை குறைவின்றி நடைபெறத்தக்க ஏற்பாடுகள் செய்து சுகமாக வாழ்ந்து வரலாயினன்

அன்றுமுதல் அப்பதிக்குத் திருமுல்லைவாயிலென்கிற பெயரே வழங்கி வருகிறது. சிவபெருமான், அரசனை நோக்கி, ‘நின்னால் மாசுபடினும் என்றும் யாம் மாசிலாமணியேயாவோம்’’ என்றருளியபடியால் அப்பெருமானுக்கு மாசிலாமணி ஈசர் எனப் பெயர் விளங்குவதாயிற்று.

அற்புத ஆகாரம்.

ஆர்ஜெண்டினா பீடபூமியில் வசிக்கும் சில இந்தியர்கள் ஆற்றில் படிந்து கிடக்கும் வண்டலினால் மாவு அரைத்து மீன் ஆகாராதிகளுடன் உபயோகப்படுத்துகின்றனர். சைபீரியாவிலும் தென் ஆப்ரிக்காவிலும் ஒருவித கற்பாறையை மாடுகளும் மனிதரும் தின்கின்றனர். அதில் உப்பும் உணவுப் பொருளும் இருக்கின்றனவாம். மலேயாவில் ஒருவித மண்ணைக் கனிகளின் ரசத்துடன் சேர்த்துச் சேமித்து வைத்துக் கொள்ளுகிறார்களாம்.

ஆபிரிக்கா தங்கனீயாகாவிலுள்ளவர்கள் மண்ணையும் மீனையும் சேர்த்து ரொட்டி மாதிரி செய்து சாப்பிடுகின்றனராம். ஜாவாவிலுள்ளவர்கள் களிமண்ணால் பிஸ்கட்டுகள் செய்கின்றனர். நாயர்கள் ஒருவித மண்ணை மாவுடன் கலந்து உண்கிறார்கள். இவைகளிலெல்லாம் பலத்தைத் தரும் மருந்துவஸ்து இருக்கிறதாம். எரிமலைப் பிரதேசங்களிலிருந்து எடுத்த மண்ணினால் நியூஜிலண்டர்கள் ஒரு வித க்ரீம் செய்து சாப்பிடுகிறார்கள். தாள் செய்த புல்லைத் தண்ணீருடன் கலந்து பாலுக்குப் பதிலாக உண்கின்றனராம். ஜப்பானில் எவ்வளவோ துறவிகள் இலைகளை யுண்டே அநேக காலம் ஜீவித்திருந்தனராம்.

சீனாவில் பஞ்சகாலம் வந்துவிட்டால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பலவிதமான மண்ணையும் மரப்பட்டைகளையும் இலைகளையும் புல்லையும் தின்கின்றனர். சிலர் கற்களைக் கூடத் தூள் செய்து சாப்பிடுகிறார்கள். இவைகள் வயிற்றை நிரப்புகின்றனவே யொழிய தகுந்த ஆகார மாகமாட்டா.

காலமறிந்து பயிர் செய்ய வேண்டும்.

ஒரு கிராமத்தில் உழவர்களெல்லோரும் உழ வேண்டிய காலத்தில் நிலத்தை உழுது விதைக்க வேண்டிய காலத்தில் விதை விதைத்துப் பயிர் முளைத்ததும் அவற்றைப்பிடுங்கி நாற்று நட்டுக் காலந் தவறாமல் நீர் பாய்ச்சி வந்தார்கள். அவ்வூரில் ஒரு பிராமணனிருந்தான். அவனுக்கு அவ்வூறிற் கொஞ்சம் நிலமிருந்தது. அதை உழுது பயிர் செய்வதற்கு வேண்டிய முன்பணம் அவனிடமில்லை. அதனால் அவன் பலவழியிற் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான்.

இதற்குள் விதைக்க வேண்டிய காலம் கடந்து போயிற்று. ஊரெல்லாம் நடவு நடும்போது பிராமணனுடைய நிலத்தில் உழவு நடந்தது. இப்பொழுது உழுவதனாற் பயனேற்படாது ‘பருவத்தே பயிர் செய்’ என்று சொல்லி யிருப்பது உமக்குத் தெரியாதா? ஏன் வீணே சிரமப்படுகிறீர்! நீர் செய்யும் வெள்ளாமை முதிர்ச்சியடையும் சமயத்தில் ஆற்றில் வெள்ளம் வரும். அந்த வெள்ளம் சாதாரணமாயிருந்து விட்டால் உம்முடைய வெள்ளாமை பிழைக்கும். இல்லாமல் கரைபுரளப்பெருகுமானால் உம்முடைய வெள்ளாமை வெள்ளத்துக் கிரையாய்ப் பாழாகும்’’ என்றார்கள்.

அந்தணன் கேட்டானில்லை. அவன் அந்தப்பயிரோடு அரும்பாடு பட்டான். ஊரில் பயிரெல்லாம் விளைச்சல்

கண்டபோது பிராமணனுடைய பயிர் குருத்து விட்டிருந்தது. குருத்து விடும்போது பயிருக்கு மழை பெய்தால் நல்லது. மழைக்காலம் கடந்து போனபடியால் பிராமணனுடைய பயிருக்கு மழையில்லாமற் போயிற்று.

அதனால் அப்பயிர் ஒரு நோயை அடைந்தது. பின் அது சரியாய் வளராமல் அறைகுறையாய் வளர்ந்து அறைவெள்ளாமை கண்டது. அது முற்றுவதற்குள் ஆற்றில் வெள்ளம் பெருகியது. அது கரைபுரண்டோடியபடியால் பிராமணன் வயலிற் பாய்ந்து அவன் வெள்ளாமையை அழித்துவிட்டது. இப்பொழுது பிராமணன் தன் மூடத்தனத்தை உணர்ந்தான்.

(மாணவன்.)

நீண்ட ஆயுளுக்குக் காரணம்

உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞான சாஸ்திர நிபுணரான ஒருவர், சமைக்கப்படாத உணவை அருந்துவதனால் ஆயுள் நீடிக்கிறதென்றும், இப்போது மனிதனுக்கு வயது நூறு என்று சொன்னாலும் 60, 70 வயதுக்குமேல் பலர் இருப்பதில்லையென்றும், சமைக்கப்படாத உணவுகளையே அருந்தினால் ஆயுள் 140 வருஷங்களாக நீடிக்குமென்றும் கூறுகின்றார்

மோதிலால் நன்கொடை

நல்ல தோலால் பைண்ட் செய்யப்பட்ட அமெரிக்க சட்ட சம்பந்தமான 230புஸ்தகங்களை பண்டித மோதிலால் நேரு காசி ஹிந்து சர்வகலாசாலைக்குக் கொடுத்திருக்கிறார். அப்புஸ்தகங்கள் 5000 ரூபாய்க்கு அதிகம் பெறுமென்று சொல்லப் படுகிறது.

2/1/82
சென்னை 600